☎ :044-27222115
Fax: 044 -27224305, 37290060

Email: skmkanci@md3.vsnl.net.in.

உ

|| Sri Chandramouleeswaraya Namaha: ||

Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta :

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

# JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

**Srimatam Samsthanam**

**No. 1, Salai Street, KANCHIPURAM - 631 502.**

சாஸ்திரங்களின் வழி நின்று, சாஸ்திரோக்தமான நித்ய, நைமித்திக கர்மங்களைச் செய்பவர்களுக்கும் உபாஸனா மார்க்கங்களை பக்தி ச்ரத்தையுடன் அனுஷ்டிப்பவர்களுக்கும் பஞ்சாங்கம் மிக மிக இன்றியமையாதது. காலை எழுந்தவுடன் பஞ்சாங்கம் பார்த்த பிறகுதான் தினசரி காரியங்களை ஆரம்பிப்பது என்பது நமது மரபு. காலை எழுந்தவுடன் பஞ்சாங்கம் பார்ப்பது கங்கா ஸ்நான பலன் தரும். ஜ்யோதிஷம் வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்று. இது பஞ்சாங்கத்தின மூலமே எல்லோருக்கும் அறிய ஸாத்யமாகிறது. திதி, வாரம், நக்ஷத்ரம், யோகம், கரணம் என்ற ஐந்து அங்கங்களைக் கொண்ட பஞ்சாங்கம் எல்லோருக்கும் பயன்படுகிறது என்றாலும் ஸ்ரீ வித்யோபாஸனையில் ஈடுபாடுள்ள சாக்தர்களுக்கு விசேஷமாகப் பயன்படுகிறது.

தேவீமான ரீதியில் தத்வ வர்ஷம், ருது, நித்யாமாஸம், திதி நித்யா, தத்வ திவஸம், வாஸரம், உதய கடிகா என்ற எட்டு அங்கங்களோடு கணனம் செய்யப் பட்ட அஷ்டாங்க பஞ்சாங்கம் வழக்கில் உள்ளது. மஹான் ஸ்ரீ பாஸ்கரராயரின் பரசுராம கல்ப ஸூத்ரத்தின் விளக்க உரையில் இவை பற்றி சொல்லப் பட்டுள்ளன. நமது ஸ்ரீமடத்தில் பூஜா ஸங்கல்பத்தில் இவற்றைச் சொல்வது வழக்கத்தில் இருக்கிறது. நிகழும் ஸர்வதாரி வருஷம் ஆவணி மாதம் 12ம் தேதி (27.08.2008) தேவீமான பஞ்சாங்க ரீதியில் மிக மிக முக்கியமான புனித நாளாகக் கருதப் படுகிறது. எட்டு அங்கங்களின் முதல் அக்ஷரம் பரஸ்பரம் அன்றைய தினத்தில் சேர்வதால் 10 யோகங்கள் ஏற்படுகின்றன. 144 வருடங்களுக்கு ஒரு முறையே இத்தகைய ஒரு சேர்க்கை ஏற்படும். இந்த புண்ய தினத்தில் ஸ்ரீ வித்யோபாஸகர்களும் மற்றவர்களும் ஸ்ரீ மஹாத்ரிபுர ஸுந்தரியை ஆராதித்து எல்லா ச்ரேயஸ்ஸுகளையும் பெற ஆசீர்வதிக்கிறோம்.

நமது ஸ்ரீமடத்தின் அத்யந்த சிஷ்யரும் ஸ்ரீ வித்யா உபாஸகருமான ப்ரும்மஸ்ரீ K.தினகர சர்மா, ஸ்ரீ தேவீமான அஷ்டாங்கமும் மற்ற பல அரிய விஷயங்களையும் தொகுத்து வெளியிடுவது அறிந்து மகிழ்கிறோம். ஸ்ரீ மஹாத்ரிபுர ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர க்ருபை எல்லோருக்கும் கிடைக்க ஆசீர்வதிக்கிறோம்.


ஆஷாட சுக்ல பௌர்ணமி
ஸ்ரீ சங்கர ஸம்வத்ஸரம் 2518

நாராயணஸ்ம்ருதி:


ஸ்ரீ ராஜமாதங்கி




# ஸ்ரீ வித்யா பஞ்சதேவதா ஆராதனை



ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி

## பக்த மண்டலி (பதிவு)

## ஸ்ரீ ரத்னகிரீஸ்வரர் ஆலயம்

ஆறாவது கிராஸ் தெரு, பெஸன்ட் நகர்,
சென்னை - 600 090.

## ஸ்ரீ வித்யா பஞ்சதேவதா ஆராதனை

### 27-08-2008 புதன்கிழமை

ஸ்வஸ்திஸ்ரீ சர்வதாரி வருஷம் ஆவணி மாதம், 11ம் தேதி (27.8.2008), புதன்கிழமை, ஏகாதசி, புனர்வசு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உலகக்ஷேமத்திற்காக, தேவி மான அஷ்டாங்கத்தின்படி பத்து விதமான புண்யகாலங்கள் சேருகின்றன. அதில், சூர்ய கிரஹணத்திற்கும், சந்திர கிரஹணத்திற்கும் ஒப்பான புண்ய காலங்கள் இரண்டும் ஒரே தினத்தில் சேருவது மிகவும் விசேஷமானது. நூற்றாண்டுகளுக்குப் பிறகு தற்போது ஏற்படுகிறது.

இந்த புண்ய காலத்தில் ஸ்ரீவித்யா உபாசகர்களும், மற்ற தேவி உபாசகர்களும், அவர்கள் எடுத்துக்கொண்ட மந்த்ர ஜபங்கள், லலிதா



ஸஹஸ்ரநாம பாராயணம், பூஜை, ஹோமங்கள் முதலியவைகளை செய்வது மிகவும் உத்தமம்.

இந்தப் புண்யதினத்தில், நம் பக்த மண்டலிக்கு சொந்தமான ஸ்ரீ அராளகேசி அம்பாள் சமேத ஸ்ரீ ரத்னகிரீஸ்வரர் சன்னிதியில் "பஞ்சதேவதா க்ரமம்" என்று சொல்லக்கூடிய ஸ்ரீ வாஞ்சா கல்பலதா கணபதி ஸ்ரீ வித்யா ஹோமம் முதல், பராஷோடசி ஹோமம் வரை, க்ரமங்கள், ஜபஹோமங்கள் அனுஷ்டித்து, மஹாபூர்ணாஹுதி, மஹா தீபாராதனை செய்து, இரவு 9.00 மணிக்கு கடங்கள் யதாஸ்தானம் செய்யப்பட்டு, ஸ்ரீ அராளகேசி அம்பாளுக்கு திவ்யாபிஷேகம், அலங்காரம், மஹாதீபாராதனை செய்து பிரசாத விநியோகம் செய்யப்படும்.

கும்பகோணம் ஸ்ரீவித்யா **ரத்னாகர** ப்ரம்மஸ்ரீ **K. தினகர சர்மா** அவர்கள் தலைமையில் பத்து தலைசிறந்த ஸ்ரீவித்யா உபாசகர்களைக் கொண்டு நடைபெறவுள்ள இந்த அரிய அம்பாள் உபாசனையில் கலந்துகொள்ளும் அனைவருக்கும், சகல க்ஷேமங்கள் ஏற்படுவதுடன், குழந்தைகளுக்கு படிப்பின் மேன்மை, விவாஹ ப்ராப்தி, அதிஉன்னத உத்யோக ப்ராப்தி, தனதான்ய ஸமர்த்தி, குடும்பத்தில் அன்யோன்ய வ்ருத்தி, மனசாந்தி, புத்ர பௌத்ர ப்ராப்தி, வ்யாதி நிவ்ருத்தி முதலிய சகல சௌக்யங்களும் ஏற்படும்.

## ஒன்றாகச் சேரும் புண்ணிய காலங்கள்

1. புஷ்பிணி
2. மோஹினி
3. ஜெயினி
4. குமாரி
5. விமலா
6. ஸ்ரீகரி
7. வாரோதயம்
8. சூர்ய கிரஹணம்
9. சந்திர கிரஹணம்
10. ஸ்ரீ ராத்ரி

## நிகழ்ச்சி நிரல்


| | | |
|---|---|---|
| அதிகாலை | 4 மணி | ஸ்ரீ வாஞ்சா கல்பலதா<br>ஸ்ரீவித்யா கணபதி ஹோமம்,<br>பூர்ணாஹுதி |
| காலை | 6 மணி | சபரிவார ஸ்ரீவித்யா ஆவரண பூஜை<br>ஸ்ரீ பாலா ஆவரண பூஜை<br>ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி ஜபம்<br>ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம மூல பாராயணம் |
| | 10 மணி | ஸ்ரீவித்யா ஹோமம்<br>ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஹோமம்<br>வசோர்தாரை, பூர்ணாஹுதி |
| மதியம் | 3 மணி | ஸ்ரீ ராஜமாதங்கி ஜபம், ஹோமம்<br>பூர்ணாஹுதி |
| மாலை | 6 மணி | ஸ்ரீ மஹா வாராஹி ஜபம், ஹோமம்<br>பூர்ணாஹுதி |

| | | |
|---|---|---|
| இரவு | 8 மணி | ஸ்ரீ வித்யா மஹா ஷோடசி ஜபம், ஹோமம் |
| | 9 மணி | மஹா பூர்ணாஹுதி |
| | | தீபாராதனை |
| | | கட யதாஸ்தானம் |
| | | ஸ்ரீ அராளகேசி அம்பாளுக்கு |
| | | திவ்யாபிஷேகம் |
| | | அலங்காரம் |
| | | மஹா தீபாராதனை |
| | | அக்ஷதாஸீர்வாதம் |
| | | பிரஸாத வினியோகம் |

அனைவரும் கலந்துகொண்டு, ஸ்ரீ அராளகேசி அம்பிகையின் பூரண அருளைப் பெற வேண்டுகிறோம்

**நிர்வாகக் குழு**
**பக்த மண்டலி**

**சங்கல்பம் - ரூ. 1000.00**
**சமஷ்டி - ரூ. 200.00**




ஸ்ரீ மஹா வராஹி